**மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

ந.க. எண். 657 / அ1 / ஒபக / 2019-1, நாள்: 04.10.2019

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – 2019–20ஆம் நிதி ஆண்டு – கலா உத்சவ் 2019 வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்பு.

பார்வை : 1. மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் திட்ட ஏற்பளிப்புக் குழுக் கூட்ட நடவடிக்கைக் குறிப்பு 2019–20, திட்ட ஒப்பளிப்பு ஆணை F. No.28-3 / 2019 – IS-9 GOI, MHRD, New Delhi, dated:16.07.2019.
திட்டக்கூறு எண்: 69
2. NCERT - கலா உத்சவ் 2019 நெறிமுறைகள்.

**கலா உத்சவ் - 2019 வழிகாட்டு நெறிமுறைகள்:**

மேற்கண்ட பொருள் மற்றும் பார்வையின் அடிப்படையில் 2019–20 ஆம் ஆண்டிற்கான தேசிய கலை விழா (Kala Utsav) செயல்பாடுகள் இடைநிலை மற்றும் மேல்நிலைக்கல்வி (IX மற்றும் XII வகுப்புகள்) மாணவர்களது படைப்பாற்றலை வளர்க்கவும், பாரம்பரிய கலைகளை உயிர்ப்புடன் வைத்திருக்கவும் இசை (வாய்பாட்டு & கருவி) நடனம் மற்றும் வண்ண ஓவியம் (Music (Vocal & Instrument) Dance, Painting எனும் நான்கு பெருந்தலைப்புகளில் போட்டிகள் நடத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய அளவில் நடைபெறும் இப்போட்டிகளில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள், அனைத்து வகையான தனியார் பள்ளிகள் மற்றும் (Local bodies - CTSA demonstration schools (DMS) of NCERT schools, BSF, CRPF, Army, Airforce, Cantonment Boards NDMC, etc.) ஒரு பிரிவின் கீழும் KVS மற்றும் NVS பள்ளிகள் பிற பிரிவின் கீழும் பங்கு கொள்ளும். 9, 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் இசை (வாய்பாட்டு, கருவி), நடனம், வண்ண ஓவியம் ஆகிய போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

இந்நிலையில் பாரம்பரியக் கலைகளை மீட்டெடுத்து உயிர்ப்பூட்டி பள்ளி மாணவர்கள் மூலம் பள்ளிகளில் அவற்றை வளர்க்க, செயல்திட்டம் தற்போது வகுக்கப்பட்டுள்ளது. சமூகப் பார்வையில், மகிழ்ச்சியின் வெளிப்பாடாக, உயிர்ப்புடன் இருக்கும் பாரம்பரியக் கலைகளை மாணவர்கள் அறிந்திடும் வகையில் மனிதவள மேம்பாட்டுத் துறை Kalautsav எனும் புத்தாக்கத் திட்டத்தை

2015–16ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இச்செயல்பாட்டில் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளும் கலந்து கொள்ள முடியும் என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, ஒவ்வொரு பள்ளியும், தனது சூழலில் உள்ள இந்த நான்கு கலை வடிவங்களை உற்று நோக்கி, பாரம்பரிய கலை நிபுணர்களை நேரடியாகச் சந்தித்து, அவர்களின் திறமைகளைப் பயன்படுத்தி மாணவ, மாணவியர்க்கு ஆர்வத்தை வளர்த்து, அவர்களைக் கொண்டு, பள்ளி, மாவட்ட, மாநில அளவிலான கலை நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்.

இத்திட்டமானது ஒவ்வொரு மாவட்டமும், தனது வட்டாரங்களில் உள்ள இந்த நான்கு கலை வடிவங்களைக் கண்டுணர்ந்து, அவை நலிந்துவிடாமல் பாதுகாக்கவும், தொடர்ந்து அவற்றை வளர்க்கவும் வழிகோலுகிறது.

இச்செயல்பாடு தகுதியான மாணவனை அந்த வட்டாரத்தின் பாரம்பரிய கலையின் வருங்கால பிரதிநிதியாக (Ambassador) ஆகப் போற்றி வளர்க்கும். எனவே பள்ளிகள், நாளைய பாரம்பரிய கலைகளின் பயிற்சி கூடமாக மாறுவதற்கும் வழியமைக்கும்.

இது வருடத்தின் ஒரு சில நாட்களில் மட்டும் நடத்தப்படும் நிகழ்வு அல்ல. வருடம் முழுமையும் நடக்க வேண்டிய நிகழ்வு. இதில் Identification, Exploring, Understanding, Practising, Evolving and Showcasing எனும் ஐந்து நிலைகள் உள்ளன. இதில் ஒரு மாணவன் முழுமையாக ஈடுபட்டால் அது அந்தக் கலையினைப் படைத்தளித்தலோடு மட்டுமல்லாமல் அந்தக் கலையாகவே வாழத் தொடங்குகிறான்.

எனவே இச்செயல்பாட்டை 2019–20ஆம் ஆண்டில் கலா உத்சவ் சார்ந்து செய்து முடிக்க மேற்கொள்ள வேண்டிய செயல்திட்டம் பின்வருமாறு திட்டமிடப்படுகிறது.

கடந்த ஆண்டு கலா உத்சவ் திட்டத்தின் வழிகாட்டுதல் நெறிமுறைகள் இந்த ஆண்டிற்கும் (2019) செயல்படுத்தப்பட உள்ளது. இதன்படி போட்டிகளில் அணியாக அல்லாமல் தனித்தனியாக மாணவ / மாணவிகள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த வாய்பபளிக்கப்பட்டுள்ளது.

கலை இனங்கள்

கலா உத்சவ் 2019ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சிகள் பாரம்பரிய / செவ்வியல் (Classical) / கிராமிய / சம காலத்திய (Contemporary) ஆகிய இவற்றில் ஏதேனும் ஒன்றாக இருக்கலாம். மேலும் கீழ்க்கண்ட நான்கு தலைப்புகளில் போட்டிகள் நடைபெற உள்ளன.

1. வாய்ப்பாட்டு இசை (தனிநபர்)
2. கருவி இசை (தனிநபர்)
3. நடனம் (தனிநபர்)
4. வண்ண ஓவியம் வரைதல் (தனிநபர்)

தகுதி:

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகள் பங்கு பெறலாம்.

தேசிய அளவிலான போட்டிகள் டிசம்பர், 2019 புதுதில்லியில் நடைபெற உள்ளன. (தேதி மற்றும் இடம் பின்னர் அறிவிக்கப்படும்).

கலா உத்சவ் போட்டிகள் கீழ்வரும் பிரிவுகளில் நடத்தப்படுதல் வேண்டும்.

| வ. எண். | நிகழ்வுகள் (Events) | Participants |
|---|---|---|
| 1. | தனிநபர் இசை (வாய்ப்பாட்டு) | 1 மாணவன் |
| 2. | தனிநபர் இசை (வாய்ப்பாட்டு) | 1 மாணவி |
| 3. | தனிநபர் இசை (கருவி) | 1 மாணவன் |
| 4. | தனிநபர் இசை (கருவி) | 1 மாணவி |
| 5. | தனிநபர் நடனம் | 1 மாணவன் |
| 6. | தனிநபர் நடனம் | 1 மாணவி |
| 7. | வண்ண ஓவியம் வரைதல் | 1 மாணவன் |
| 8. | வண்ண ஓவியம் வரைதல் | 1 மாணவி |

இப்போட்டிகள் யாவும் பள்ளி அளவிலும், மாவட்ட அளவிலும் மற்றும் மாநில அளவிலும் நடத்தப்பட்டு மாநில அளவில் தேர்வு பெறுவோர் மட்டும் தேசிய அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

விருதுகள்

தேசிய அளவில் வெற்றி பெறும் மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசு, கேடயம் மற்றும் பதக்கத்துடன் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | – | ரூ. 25,000/– |
| இரண்டாம் பரிசு | – | ரூ. 20,000/– |
| மூன்றாம் பரிசு | – | ரூ. 15,000/– |

தேசிய அளவில் கலந்து கொள்வோர்க்கு 'பங்கேற்பு' சான்றிதழும் வழங்கப்படும்.

## போட்டிகளுக்கான வழிகாட்டுதல் நெறிமுறைகள்:

1. தனிநபர் இசை வாய்பாட்டு:

- நிகழ்ச்சியின் கால அளவு – 4–6 நிமிடங்கள்
- அரங்க அமைப்புக்காக (தொடக்க மற்றும் முடிவுக்காக) கூடுதலாக 5 நிமிடங்கள் ஒதுக்கப்படும்.
- நிகழ்ச்சி பாரம்பரிய / செவ்வியல் (Classical) / கிராமிய (Folk) / நடப்பு கால (Contemporary) / சம காலத்தவை இவற்றுள் ஏதேனும் ஒன்றாக இருக்கலாம்.
- நிகழ்ச்சியானது ஏதேனும் ஒரு மொழி (அ) வட்டார மொழியாக இருக்கலாம்.
- உடை, அமைப்பு, பயன்படுத்தப்படும் பொருள் நிகழ்ச்சிக்குப் பொருத்தமுடையதாக இருத்தல் வேண்டும்.
- பாடுபவர், ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள இசைக்கருவிகளின் பின்னிசையில் (Track) பாடுவதற்கு அனுமதிக்கப்படுவர். பின்னிசை (Track) பங்கேற்பாளர் எடுத்து வருதல் வேண்டும்.
- தேவைப்படும் பக்கவாத்திய கருவிகள் போட்டி அமைப்பாளர்களால் ஏற்பாடு செய்து தரப்படும். தேவையான கருவிகள் குறித்து முன் கூட்டியே தெரிவித்தல் வேண்டும்.
- பக்க வாத்திய இசைக்கருவிகள் ஆசிரியரால் (ஒரு நபர்) இசைக்கப்படலாம்.
- இசைக்கருவி இசைக்கும் ஓர் ஆசிரியர் தவிர வேறு ஆசிரியரோ (அ) வல்லுநரோ அனுமதிக்கப்பட மாட்டார்.
- வாய்ப்பாட்டின் சுருக்க உரை (வரலாறு, பாரம்பரியம், முக்கியத்துவம் இன்றைய நிலை பற்றி) ஆங்கிலத்தில் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் ஒப்படைக்கப்பட வேண்டும்.

### மதிப்பீட்டு தாள் – வாய்ப்பாட்டு

நிகழ்ச்சியின் தலைப்பு

| பாடும் பாணி | சுரம் | தாளம் | பாடல் உச்சரிப்பு | படைப்பாற்றல் | நம்பகத் தன்மை | வழங்கும் திறன் | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|
| 10 | 20 | 20 | 15 | 10 | 10 | 15 | 100 |

**2. தனிநபர் இசை (இசைக்கருவி):**

- நிகழ்ச்சியின் கால அளவு – 4–6 நிமிடங்கள்
- அரங்க அமைப்புக்காக (தொடக்க மற்றும் முடிவுக்காக) கூடுதலாக 5 நிமிடங்கள் ஒதுக்கப்படும்.
- நிகழ்ச்சி பாரம்பரிய / செவ்வியல் (Classical) / கிராமிய (Folk) / நடப்பு கால (Contemporary) / சம காலத்தவை இவற்றுள் ஏதேனும் ஒன்றாக இருக்கலாம்.
- ஏதேனும் இந்திய இசைக்கருவிகள் வாசிக்கப்படலாம். மாணவர்கள் தங்களுக்குரிய இசைக்கருவியை தானே எடுத்து வருதல் வேண்டும்.
- உடை, அமைப்பு, பயன்படுத்தப்படும் பொருள் நிகழ்ச்சிக்குப் பொருத்தமுடையதாக இருத்தல் வேண்டும்.
- போட்டி அமைப்பாளர்கள் தங்களுக்குத் தேவையான பக்கவாத்திய இசைக்கருவிகளுக்கு ஏற்பாடு செய்து தருவார்கள். முன்பே சரியான இசைக்கருவி தேவையைக் குறிப்பிடல் வேண்டும். பங்கேற்பாளர் தவிர வேறு ஆசிரியரோ (அ) வல்லுநரோ அனுமதிக்கப்பட மாட்டார்.
- இசைக் கருவி பற்றிய சுருக்க உரை (வரலாறு, பாரம்பரியம், முக்கியத்துவம் இன்றைய நிலை பற்றி) ஆங்கிலத்தில் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் ஒப்படைக்கப்பட வேண்டும்.

### மதிப்பீட்டு தாள் –கருவி இசை

நிகழ்ச்சியின் தலைப்பு:

| இசைக்கும் பாணி | சுரம் | தாளம் | பொருள் | இசைக்கருவியை கையாளும் விதம் | படைப்பாற்றல் மற்றும் நம்பகத் தன்மை | வழங்கும் திறன் | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|
| 10 | 20 | 20 | 15 | 10 | 10 | 15 | 100 |

**3.தனிநபர் – நடனம்:**

- நிகழ்ச்சியின் கால அளவு – 4–6 நிமிடங்கள்
- அரங்க அமைப்புக்காக (தொடக்க மற்றும் முடிவுக்காக) கூடுதலாக 5 நிமிடங்கள் ஒதுக்கப்படும்.
- நிகழ்ச்சி பாரம்பரிய / செவ்வியல் (Classical) / கிராமிய (Folk) / நடப்பு கால (Contemporary) / சம காலத்தவை இவற்றுள் ஏதேனும் ஒன்றாக இருக்கலாம்.
- இசை, பதிவு செய்யப்பட்டதாக (அ) உயிரோட்டமாகவோ இருக்கலாம்.
- உடை, அமைப்பு, பயன்படுத்தப்படும் பொருள் நிகழ்ச்சிக்குப் பொருத்தமுடையதாக இருத்தல் வேண்டும்.
- போட்டி அமைப்பாளர்கள் தங்களுக்குத் தேவையான பக்கவாத்திய இசைக்கருவிகளுக்கு ஏற்பாடு செய்து தருவார்கள். முன்பே சரியான இசைக்கருவி தேவையைக் குறிப்பிடல் வேண்டும்.
- நடன அமைப்பின் சுருக்க உரை ஆங்கிலத்தில் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மதிப்பீட்டு தாள் – நடனம்

**நிகழ்ச்சியின் தலைப்பு:**

| நடனம் – பாணி | சுரம் / பாட்டு | தாளம் | ஒப்பனை | உடை அலங்காரம் | நம்பகத் தன்மை | படைப்பாற்றல் | வழங்கும் திறன் | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | 15 | 15 | 10 | 10 | 10 | 15 | 15 | 100 |

**4. ஓவியம்:**

- ஒரு பங்கேற்பாளர் ஒரே ஒரு ஓவியம் தீட்டுவதற்கு மட்டுமே அனுமதி உண்டு.
- பங்கேற்பாளர்கள் போட்டியின் போது ஓவியம் தீட்டுதல் வேண்டும். அவர்கள் எந்தவொரு ஓவியமும் வரைந்து வண்ணம் தீட்டி கொண்டு வருதல் கூடாது.
- தேசிய அளவிலான ஓவியப் போட்டிக்கு வண்ணப்பூச்சுகள் (Painting Materials) மையத்தில் வழங்கப்படும். ஆனால் ஓவியத்திற்கு தேவையான brushes, மற்ற பொருட்கள் கொண்டு வருதல் வேண்டும்.
- நடுவர் ஓவியத்தின் பொருள் / theme பற்றி கேட்கும் பொழுது விவரித்தல் வேண்டும்.

- பங்கேற்பாளர்கள் தான் வரைந்த ஓவியத்தை திரும்ப எடுத்து செல்லும் பொறுப்பு அவர்களுடையது.
- ஒவ்வொருவருக்கும் 3ft x 3ft அளவு ஓவியத்தை காட்சிப்படுத்த ஒதுக்கப்படும்.
- ஓவியம் பற்றிய சுருக்க உரை ஆங்கிலத்தில் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் ஒப்படைக்கப்பட வேண்டும்.

**மதிப்பீட்டு தாள் – ஓவியம் வரைதல்**

**படைப்பின் தலைப்பு:**

| காட்சிப் பொருள் **(Theme)** தேர்ந்தெடுத்தல் | காட்சிக் கட்டமைப்பு **(Composition)** | சுயத் தன்மை | நேர்த்தி தன்மை | காட்சிப்படுத்தும் திறன் | ஓவியத்தின் தாக்கம் | வழங்கும் திறன் | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|
| 10 | 15 | 20 | 10 | 10 | 15 | 20 | 100 |
| | | | | | | | |

மேற்கண்ட புதிய கலா உத்சவ் 2019 வழிகாட்டுதல் செயல்முறைகளைப் பின்பற்றி மாவட்ட அளவிலான கலா உத்சவ் போட்டிகளை எவ்வித புகாருக்கும் இடமளிக்காவண்ணம் செவ்வனே செயல்படுத்திட அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மாநில அளவிலான போட்டிகளுக்கான நிகழ்விடம் மற்றும் தேதி பின்னாளில் அறிவிக்கப்படும்.

for 4.10.19

மாநில திட்ட இயக்குநர்

பெறுநர்

அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்:

இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம்,
சென்னை – 600 006.